# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2018 ஐப்பசி மாதம் 29ம் திகதி முதல் கார்த்திகை மாதம் 03ம் திகதி வரை

## *“பூரணமான தூய ஆவியானவரின் வழிநடத்தலுக்கு உள்ளான பேறுபெற்ற தாய்”*

01. ஆரம்பப் புகழ்ச்சி :- புபுது பாடல் இல 05 “ஞானம் வீரம் சக்தி…..”

02. புகழ்ச்சிக்கானநோக்கு:-

**“மூதாதையரின் கடவுளே: இரக்கத்தின் ஆண்டவரே நீர் எல்லாவற்றையும் உமது சொல்லால் உண்டாக்கினீர். நீர் உண்டாக்கிய படைப்புக்களின் மேல் ஆட்சி செலுத்தவும், தூய்மையோடும் நீதியோடும் உலகை ஆளவும், நேர்மையான உள்ளத்தோடு தீர்ப்பு வழங்கவும் உமது ஞானத்தால் மானிடரை உருவாக்கினீர்.”** (சாலமோனின் ஞானம் 9:1-3) தனது வார்த்தையால் முழு உலகையும் படைத்த மகோன்னத இறைவன் தனது மூச்சுக் காற்றினால் மனிதனைப் படைத்தார். சர்வ வல்லமை பொருந்திய, அதி மகிமைக்குரிய இறைவனைப் புகழ்ந்திடும் வரத்திற்கு அழைப்பினை பெற்றுள்ள, தேர்தெடுக்கப்பட்ட மறுமலர்ச்சி அடைந்த கிறிஸ்தவ மக்களாக இன்றைய நாளில் புகழ்ச்சிக்கு உள்ளாவதற்கு ஆயத்தமாவோம்.

புபுது பாடல் இல 135 “சகலபடைப்பிற்கும் உயிரும் பெயரும்….”

03. நாளுக்குரியநற்செய்தி

“பூரணமாக தூயஆவியானவரின் வழி நடத்தலுக்கு உள்ளான பேறுபெற்ற தாய்”

- சென்ம பாவத்தினின்றும் விடுபட்ட பரிசுத்த கருத்தரித்தலின் ஊடாக பிறந்திடும் வரப்பிரசாதத்தினைப் பெற்றது பேறுபெற்ற தாயார் தூயஆவியானவரின் வழிநடத்தலுக்குள் வாழ்ந்திடப் பெற்ற வரமல்லவா?
- யூத சமுதாயத்தில் அனைத்து யுவதிகளும் எதிர்பார்த்திருந்த, உலக மீட்பர் தனது வயிற்றில் உருவாகிடும் ஆசீர்வாதத்தைப் பெற்றமையும் தூயஆவியானவரின் செயல்பாடு அவருக்குள் நிகழ்ந்த ஒரு நிகழ்வல்லவா?
- கடந்த சில வாரங்களாக நாம் தியானித்த அவருடைய முழு வாழ்க்கையும் தூய ஆவியானவரின் வழிநடத்தலுக்கு இடமளித்த, இறை வார்த்தைக்குள் வாழத் தாகத்துடன் கூடிய வாழ்வு அவ்வண்ணமே தனக்குள் நிகழ்ந்த தன்னால் நிகழ்த்தப்பட்ட அனைத்து செயல்பாடுகளிலும் தூய ஆவியானவருக்கு விழிப்புறும் வாழ்க்கை வாழ்ந்த தேவதாயின் வாழ்வு வியக்கத்தக்கது. புதுமையானது, அவரது நாவினின்று வெளிப்பட்ட வார்த்தை, சிரிப்பு, பார்வை, பிரதிசெயல் அனைத்தும் சாதாரண மனித மகளினின்று வெளிப்படுபவை அல்ல என்பதே அமைதியாக இன்னும் சில கணங்களில் காத்திருத்தல், இடமளித்தல் அவ்வாறே உன்னத பாடலின் ஒளிரும் அவரது ஞானம் மிகவும் மேன்மையானது.
- சிலுவையடியில் அவர் கழித்த கலக்கமான கணம், வேதனையான நேரம் இயேசு ஆண்டவர் சிலுவை மரணத்தில் கடுமையாக பட்ட வேதனையை தானும் அனுபவிப்பதற்கு நேர்ந்த கணம் போலவே அந்த இருளான நேரத்தில் எம் ஆண்டவர் முழுமையாக இறை தந்தைக்கு உரிமையானது போலவே, தேவதாயும் இறை தந்தையிலே விசுவாசத்துடன் உயிர்ப்பு வரைக்கும் எதிர்பார்ப்புடன் இருந்தது தூய ஆவியானவரின் வழிநடத்தலுக்கு உள்ளாகிய வல்லமையால் அல்லவா?

- மீட்பின் திட்டத்திற்கு முழுமையாக ஒத்துழைத்த பேறுற்ற தாய் துணை மீட்பாளராக திருச்சபையினால் பெருமைபடுத்தப்படுகிறார். அப்படியாயின் திருச்சபையின் தாய் அவராவார். இவ்வாறான ஆசீர்வாதத்தினைப் பெறுவதற்கு முடியுமானது, பேறுபெற்ற தாய் தனது முழு வாழ்வையுமே தூய ஆவியானவரின் வழி நடத்தலுக்கு இடமளித்து, இறை வார்த்தையில் வாழ்ந்ததுமே என்பதை அவரது வாழ்வின் நடைமுறையின் வழியாக அவரது பூரணத்துவத்தை நாம் கண்டுகொள்ளலாம்.

04. கலந்துரையாடலுக்காக – அருகிலிருப்பவருடன் பகிர்ந்து கொள்ளவும்.

1. பேறுபெற்ற தாயின் தாய்மையின் பாதுகாப்பின் வழியாக, திருச்சபையின் தாயின் நடுநிலையின் வழியாக, கிறிஸ்தவ சீடர்களாக சாட்சி பகர்ந்திட வரம் பெற்றுள்ள எமது வாழ்க்கையில் :

- நாம் எவ்வளவு தூரம் தூய ஆவியானவரின் வழிநடத்தலுக்கு இடமளிக்கின்றோம்.
- இறை வார்த்தை குறித்து எங்களுக்குள் இருக்கும் விழிப்புறுதல், தாகம் எவ்வளவு
- தூய ஆவியானவருக்கு விழிப்புறும் வாழ்க்கைக்கு நாம் உள்ளாகியிருக்கிறோமா?

05. செயல்பாட்டிற்காக

i. அன்றாட வாழ்வில் நாம் முகம் கொடுக்கும் பலவித நிகழ்வுகளின் போது தேவதாயைப் போன்று தூய ஆவியானவருக்கு விழிப்புறுவோம்.
ii. எனக்குள் செயல்படும் என்னை வழிநடத்தும் தூய ஆவியானவருக்கு இடமளிப்போம்.
iii. இறை வார்த்தையை வாழ்வின் உணவாக்கிக் கொள்ள தாகம் கொள்வோம். வார்த்தையினுள் வெளிப்படும் இயேசு ஆண்டவரின் குரலை இனங்கண்டு கொள்வோம்.

06. இறுதிப் புகழ்ச்சி

புபுது பாடல் இல 303 (பொருத்தமான பாடலை பாடவும்)